இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் இன்று நடைபெறவுள்ள தேவர் ஜெயந்தி விழாவில் கலந்துகொள்ள மதுரைக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2025) மதுரை சுற்றுலா மாளிகையில், இந்திய குடியரசுத் துணை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களை சந்தித்து பேசினார். இந்நிகழ்வின் போது, அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு மற்றும் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (31-10-2025) வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்

அமைச்சர் மா.சுப்பிரமணியன்,
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

நெடு நாள் கனவாக இருந்து, இப்போது நனவாகி வரும்

சகோதரி பிரேமாவின் இல்ல கட்டுமானப் பணி மகிழ்ச்சியளிக்கிறது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 30 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

நெடுநாள் கனவாக இருந்து, இப்போது நனவாகிவரும் சகோதரி பிரேமா அவர்களது இல்லத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டேன். கல்வி கொடுத்த உயர்வில் பிறந்துள்ள இந்த மகிழ்ச்சி, இவர்களின் கனவு இல்லத்தில் என்றும் நிறைந்திருக்க வேண்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

கடலூர் மாவட்டம் – வேப்பூர் – மங்களூர் கிராமத்தில்

விஷப் பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் அறிவிப்பு!

சென்னை, அக். 30 -

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், மங்களூர் கிராமத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், மங்களூர் கிராமம், மேட்டுத் தெருவில் வசிக்கும் திரு.செந்தில் (வயது 45) த/பெ.முத்துகருப்பன் என்பவர் இன்று (29.10.2025) மாலை சுமார் 04.00 மணியளவில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக விஷப்பாம்பு கடித்ததில் உடனடியாக சிகிச்சைக்காக மங்களூர் அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்ட கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் – முனைவர் பி.பழனியப்பன் அறிவிப்பு!

தருமபுரி,அக்.30-

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முனைவர். பி.பழனியப்பன் அறிக்கை வருமாறு:

கழகத்தலைவர் - முதலமைச்சர் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (31.10.2025-வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் காரிமங்கள் கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத்தலை கே.மனோகரன் தலைமையில் நடைபெறும். அதுசமயம் நாடாளுமன்ற உறுப்பினர். முன்னாளௌ சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாங்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள். பேரூர் க்கழகச் செயலாளர்கள் தேர்தல் பணிக்கு ஒருங்கிணைப்பாளர்கள் ,மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைனரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1.கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 28.10.2025 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற "உன் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பயிற்சிக் கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைகள் குறித்தும்.

2. Special Intensive Revision (SIR) எனப்படும் சிறப்புத் திருத்தத்தை 04.11.2025 அன்று முதல் நடைமுறைபடுத்துவது குறித்தும்.

3. கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச் அவர்களின் பிறந்தநாள் விழாவினை "எளியோரின் எழுச்சி" நாளாக கொண்டாடு குறித்தும்

இவ்வாறு முனைவர். பி.பழனியப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (29.10.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு , , வார்டு75, பிரிக்ளின் சாலை, எஸ். எஸ்.புரம் சந்திப்பு பகுதியில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு, முகாமில் கலந்து கொண்ட நபர்களுக்கு மருந்து மாத்திரைகளுடன் ரொட்டி, பால், பிஸ்கெட், பழங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். அதுபோது மேயர் ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம். பி., ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார், எல். ரமணி எம்.ச. எஸ். தமிழ்செல்வி, வட்டச் செயலாளர் பா.பி.தாஸ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர்அக் 30;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஆலோ சனை கூட்டம் கழக துணை பொதுச்செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி, தமிழ் நாடு சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் ஆலோசனைப்படி

இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது

அதுசமயம் இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.. ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ இ.ஏ.பி.சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் செல்வராஜ், கவி.கணேசன், , மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், , மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜதுரை, ஏ.கே.சுரேஷ் பொதுகுழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்தகுமார், மு.மணிபாலன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், மு.முரளிதரன், ஆ.ராஜா, வே.ஆனந்த் குமார், ஏ.ஆர்.டி. உதயசூரியன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன்,, அபிராமி குமரவேல், பி.முத்து, க.சு. தமிழ உதயன் தவறாமல்கலந்துகொள்ளுமாறுகேட்டுக் கொள்கிறேன்

பொருள் ; கழகத் தலைவர். முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் 28.10.2025 அன்று நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" குறித்து.

SIR சிறப்பு தீவிர திருத்தம் சம்மந்தமாக, குறித்து வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்

மாதவரம் 16வது வட்டம் கடப்பாக்கம் கிராமத்தில் பொதுமக்களுக்கு காலை உணவு

இ. கண்ணப்பன்,கே. சிவசங்கரன்,நா. மோகன் குமார் என். மகேஷ்குமார், வி. சிவ பிரகாஷ் பங்கேற்பு

சென்னை, அக். 30 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பருவமழையை தொடர்ந்து பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் கடப்பாக்கம், கன்னியம்மன் பேட்டை, சத்திரமேடு, ஆண்டார்குப்பம், சடையங்குப்பம், பர்மா நகர், மணலி புதுநகர் ஆகிய பகுதிகளில் தேங்கிய மழைநீர் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி தொடர்ந்து வீதி வீதியாக கண்காணிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள்கண்டறிந்து நீரை அகற்றும் பணியும் சாலைகளை செப்பனிடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் எலந்தனூர், கடப்பாக்கம் ஆகிய பகுதிகளில் சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து மழையினால் பாதிக்கப்பட்ட கடப்பாக்கம் மக்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் அறுசுவை காலை உணவு வழங்கப்பட்டது. நான்கு சக்கர வாகனத்தில் வீடு வீடாக சென்று காலை உணவை கழகத்தினர் வழங்கினார்கள். 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையிலும், பகுதி துணை செயலாளர் கே. சிவசங்கரன்,மாவட்ட பிரதிநிதி நா. மோகன் குமார் நாகூரார்,வட்ட துணைச் செயலாளர் புவனேஸ்வரி மகேஷ் குமார்,கடப்பாக்கம் கிராம தலைவர் மகேஷ் குமார், கிராம செயலாளர் சாம்ராஜ், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவபிரகாஷ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜெயபால், தயாளன், அர்ஜுனன், கடப்பாக்கம் நீதி, ஏழுமலை உள்ளிட்ட கழகத்தினர் திரளாக வருகை தந்து பொதுமக்களுக்கு காலை உணவை வழங்கி மகிழ்ந்தனர்.

மேலும் கடப்பாக்கம் பெருமாள் கோயில் தெரு, கன்னியம்மன் பேட்டை இரண்டு பகுதிகளிலும் உள்ள சாலைகளை சீரமைக்க கோரி மணலி மண்டல அலுவலர் தேவேந்திரன் அவர்களிடம் மனு கொடுத்தனர். உதவி செயற்பொறியாளர் சுமித்ரா, உதவி பொறியாளர் விஜய் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தீவிரமாக செயல்பட்டு சாலைகளை சீரமைக்கும் பணிகளை செய்து வருகிறார்கள்

பருவமழை காலத்தில் வீடு தேடி ஓடோடி வந்து உதவிகள் செய்ய உத்தரவிட்ட தமிழ் நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பொதுமக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

விழுப்புரம் மத்திய மாவட்ட திமுக பி.எல்.ஏ.2 - பி.டி.ஏ. தேர்தல் பணிக்குழு ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.இரா.இலட்சுமணன், எம்.எல்.ஏ., அறிக்கை!

விழுப்புரம், அக். 30 -

விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் மத்திய மாவட்ட திமுக BLA2, BDA, தேர்தல் பணிக்குழு ஆலோசனைக் கூட்டம் (30.10.2025) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முட்ராம்பட்டு, நாராயிணி அம்மாள் திருமண மண்டபத்தில் வானூர் சட்டமன்ற தொகுதிக்கு நடைபெற உள்ளது.

எனது தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டங்களில் முட்ராம்பட்டில் மாநில பொறியாளர் அணி செயலாளர், வானூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் திருமிகு.எஸ்.கே.பி.கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு முன்னிலை வகிக்கவுள்ளார்கள்

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் BLA2, BDA, தேர்தல் பணிக்குழு, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் வட்டத்திற்குட்பட்ட அன்னாத்தூர் ஊராட்சி, ஆலப்பாக்கம் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி., மாவட்ட மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், ஆகியோர் 82,000 மீன் குஞ்சுகளை ஏரியில் வளர்ப்புக்காக விட்டனர். அதுபோது திட்ட இயக்குநர் ஆர்த்தி, உதவி இயக்குநர் சசிகலா, ஒன்றியக் குழு துணை பெருந்தலைவர் வசந்தி குமார், ஒன்றிய செயலாளர் டி.குமார், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், கவுன்சிலர் பி. சுப்பிரமணி, ஊராட்சி மன்ற தலைவர் பாலு உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், மீன்வளத்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
167	மே.பொ. / இ - 1 / வ.செ.அ.மி.நி - 2	NCTPS II MI Circle BM Division Unit I Boiler Providing cup lock metallic scaffolding arrangements
186	மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2	Supply of MS Distributor sheet for air washer system
189	மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2	supply of seamless pipe for seal air fan suction pipeline for XRP 1043 Bowl Mill
237	மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 1	ESP Hopper Complete Assembly
240	மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 1	Plate heat exchanger end plate
05	த.பொ. / வ.செ.அ.மி.நி - III	Procurement of Caustic Soda Lye as 100 percentage NaOH Basis
191	மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2	Supply of Brushable ceramic Epoxy Material for Cladding Work in Condenser Cooling Water Inlet
193	மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2	Procurement of Brushable ceramic Epoxy for cladding works in Unit I

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/5896/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் பெயர்
C 268	த.பொ./செ/வடக்கு	Laying of 33 KV 3 core 400 sqmm XLPE UG Cable from Athipattu 110 KV SS to IOCL R 3
C 269	த.பொ./செ/வடக்கு	Rerouting of existing 33 KV single core 630 sqmm XLPE UG Cable from Korattur 230 SS to the Annaingr SS

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளின் (e-tender) பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app; www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb; www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/5892/ஒப்பந்தப்புள்ளி/2025

பெருநகர சென்னை மாநகராட்சி
(தெற்கு வட்டாரம்) இயந்திரப் பொறியியல் துறை

வ.அ.(தெ).இ.பொ.து.ந.க.எண்.எஸ்1/303/2025

மின்னணு ஒப்பம்

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (தெற்கு) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

பணியின் விவரம் : புதிதாக வழங்கப்பட்ட 15 எண்ணிக்கையிலான அமலாக்க வாகனங்களை இயக்குவதற்கு 30 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்களை (LMV Drivers) 06 மாத காலத்திற்கு (180 நாட்களுக்கு) மின்னணு மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்துவதற்கு ஒப்பம் கோரப்படுகிறது (ஒப்ப விதிகளின்படி)

பணியின் மதிப்பு : ரூ.66,53,124/- முன் வைப்பு தொகை ரூ.66,600/-

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **13.11.2025 மாலை 03.00 மணி**
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **14.11.2025 மாலை 03.15 மணி**
மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in**

செ.ம.தொ.இ / 5915 / ஒப்பந்தப்புள்ளி / 2025

மேற்பார்வை பொறியாளர் (தெற்கு)